**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்.**

**அசல் வழக்கு எண்.205/2025**

**வா.சா.– 1– சாந்தி , க/பெ.வேலுச்சாமி**

**நாள். 07.08.2026**

**வா.சா.1 இன்று ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 5,6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :–**

எனக்கு வயது 53 ஆகிறது. நான் எந்ததுறையில் பணியிலிருக்கிறேன் என்றால் மலைப்பட்டியில் பஞ்சாயத்து யூனியன் மிடில் பள்ளியில் ஆசிரியராக பணிபுரிகிறேன். நான் தாக்கல் செய்துள்ள கொடிவழி ஜாபிதாவில் திப்புரெட்டியாரின் அப்பா பெயர் வேலாச்சி ரெட்டியார் ஆகும். என் ஊரில் போலாச்சி மகன் திப்பு ரெட்டியார் என்ற வேறொரு நபர் உள்ளார் என்றால் சரிதான். நான் சொல்லும் வேலாச்சி ரெட்டியார் மகன் திப்புரெட்டியார் 28.05.2004 ல் இறந்து விட்டார் என்றால் சரிதான். பாப்பம்மாள் என் அம்மா ஆவார், அவர் இறந்தது 20.04.1980 ஆகும். எனது அப்பா திப்பு ரெட்டியார் என்று சொல்வதற்கு எனக்கு பிறப்பு சான்றிதழ் உண்டா என்றால் இல்லை. தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. திப்பு ரெட்டியார் 28.05.2004 இறந்தார் என்பதை நான் பதிவு செய்தேனா என்றால் இல்லை. அந்த இறப்பு சான்றிதழில் பார்த்தால் திப்பு ரெட்டியாரின் அப்பா, அம்மா, மனைவி பெயர் ஆகிய விவரங்கள் தெரியும் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.6 இறப்பு சான்றிதழில் திப்புரெட்டியாரின் இறப்பு சான்றிதழில் என் அம்மா பெயரோ, இறந்தவரின் அப்பா பெயரோ உள்ளதா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.4. ஆவணமான சொத்து விவரத்திற்கான பட்டாவில் என் அம்மா பெயரோ, என் பெயரோ இடம் பெற்றுள்ளதா என்றால் இல்லை, விட்டு விட்டார்கள். குடும்ப ஏற்பாட்டு ஆவணமாக தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.2. ஆவணத்தில் என் அம்மா பெயரோ, என் பெயரோ இடம் பெறவில்லை என்றால் சரிதான். திப்புரெட்டியாரின் சகோதரி காமாட்சி எழுதிக் கொடுத்துள்ள வா.சா.ஆ.3 ஆவணத்தில் என் அம்மா பெயரோ, என் பெயரோ இடம் பெறவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.9 வில்லங்க சான்றிதழில் என் அம்மா பெயரோ, என் பெயரோ இடம் பெறவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.11 ஆவணமான ஆதார் அட்டையில் எனது தந்தையார் திப்பு ரெட்டியார் என சொல்லப்படவில்லை என்றாலும் Care of என்றுதான் போட்டுள்ளது என்றால் சரிதான், மேற்படி ஆதார் அட்டை 27.10.2020 ல் வாங்கினேன் என்றால் அப்டேட் செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ.13 பான்கார்டை திப்பு ரெட்டியார் இறந்த பின்பு வாங்கினேனா என்றால் வருடம் ஞாபகம் இல்லை, வேலைக்கு போன பிறகு வாங்கினேன். வா.சா.ஆ.15 ஆவணமான மாற்றுச் சான்றிதழ் பள்ளியிலிருந்து

வாங்க வேண்டும் என்றால் என் அம்மாவோ, அப்பாவோ கையெழுத்திட்டு வாங்க வேண்டும் என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் என் அப்பாவோ, அம்மாவோ கையெழுத்திட்டார்களா என்றால் இல்லை, என் மாமா கையெழுத்து போட்டுள்ளார். வா.சா.ஆ.16 ஐ எந்த வருடம் வாங்கினேன் என்றால் 1988 ல் வாங்கினேன். நான் சொல்லிய விவரங்களைத்தான் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் 10 முதல் 16 வரையிலானவை என் தந்தை என்று சொல்லப்படும் திப்புரெட்டியார் 2004 ல் இறந்த பின்பு வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. நான் சொல்லும் வேலாச்சிரெட்டியாரின் மகன் திப்புரெட்டியார் மகள் நான் இல்லை என்றால் சரியல்ல. குடும்ப ஏற்பாட்டு ஒப்பந்தம் (வா.சா.ஆ.2) திப்பு ரெட்டியாருக்கு பாகப்படியும், அவரது சகோதரி எழுதிக் கொடுத்த செட்டில்மெண்ட் படியும் தனித்து பாத்தியப்பட்ட சுயார்ஜித சொத்து என்றால் சரியல்ல. 09.09.2005 க்கு முன்பு தாவாவில் சொல்லப்பட்டுள்ள 2,3 ஆவணங்களைத் தவிர வேறு ஆவணங்கள் இல்லை என்றால் சரியல்ல. நான் உடன் பங்குதாரர் இல்லை என்றாலும் திப்புரெட்டியாரின் மகள் அல்ல என்றாலும் சரியல்ல. இந்த வழக்கு சொத்தில் நான் கூட்டு அனுபவத்தில் இருப்பதாக சொல்லி நீதிமன்ற கட்டணம் கட்டியுள்ளதால் கூட்டு அனுபவத்தை காட்டுவதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் சொல்லும் திப்பு ரெட்டியாருக்கு பாலாமணி என்ற ஒரே மனைவிதான் என்றால் சரியல்ல, அவருக்கு என் அம்மாதான் முதல் மனைவி ஆவார். 2,3,4 பிரதிவாதிகள் தான் பாலாமணியின் மக்கள் என்றால் சரியல்ல. தாவா வழக்கு சொத்தில் எனக்கு பாகம் இருப்பதாக ஆவணங்கள் மூலமாக நான் நிரூபணம் செய்யவில்லை என்றால் சரியல்ல. மூல ஆவணங்கள் தாக்கல் செய்யாமல் திப்பு ரெட்டியார்எழுதி கொடுத்த பத்திரங்களை செல்லாது என பரிகாரம் கேட்க எனக்கு எந்த முகாந்திரம் இல்லை என்றால் சரியல்ல. திப்புரெட்டியார்இறந்த பின்பு என் அம்மாதான் மனைவி என்றும் நான் தான் மகள் என்றும் வாரிசு சான்றிதழ் வாங்கியுள்ளேனா என்றால் வேடசந்தூர் வட்டாட்சியரிடம் விசாரணை நிலுவையில் உள்ளது. 2,3,4 பிரதிவாதிகளும் பாலாமணியும் தன் கணவர் இறந்ததற்கு பின்பு அவரது இறப்பு சான்றிதழை வைத்து மேற்படி நபர்கள் பிறப்பு சான்றிதழும், வாரிசு சான்றிதழும் வைத்துள்ளார்கள் என்றால் பின்னிட்டு தெரிய வந்தது. 2004 ல் திப்பு ரெட்டியார் இறந்த பின்பு 3 வருடத்தில் வாரிசு சான்றிதழ் வாங்காமல் 2025 வரை வாரிசு சான்றிதழ் பெற எந்த முயற்சியும் செய்யவில்லை என்றால் சரிதான், நீதிமன்றத்திற்கு சென்ற பின்பு சென்ற வருடந்தான் விண்ணப்பித்தேன. திப்பு ரெட்டியார் இறந்த பின்பு அவரது வாரிசுகளான 2,3,4 பிரதிவாதிகள் வாரிசு சான்றிதழ் வாங்கியது எப்போது தெரிய வந்தது என்றால் கடந்த 2,3 வருடத்திற்குமுன்பாகத்தான் தெரிய வந்தது.அந்த வாரிசு சான்றிதழில் என் பெயர் இல்லை என்றும் தவறாக வழங்கப்பட்டிருக்கிறது என கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு செய்தேனா நேரில் கேட்டேன், மனு அளித்ததற்கான ஆதாரம் இல்லை. வழக்கு

சொத்துக்களை தவிர பாலாமணியின் கணவர் திப்பு ரெட்டியாருக்கு பாகாநத்தம் கிராமத்திலோ வேறு கிராமத்திலோ வேறு சொத்து இல்லை என்றால் சரிதான். பாலாமணியின் கணவர் திப்புரெட்டியாரின் வாரிசு சான்றிதழ் இடம் பெறாததற்கு காரணம் என்னவென்றால் நான் அவரது மகள் இல்லை என்பதால்தான் இடம் பெறவில்லை என்றால் சரியல்ல. 5,6 பிரதிவாதிகள் உண்மையான கிரையதாரர்கள் என்றால் சரியல்ல. தாவா வழக்கிற்கு முன்பாக தாவா சொத்தில் எனக்கு பாகம் இருப்பதாக நான்தான் அவரின் மகள் என்றோ என் அம்மாதான் மனைவி என்றோ வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள பாகவழக்கில் எனக்கு பாகம் கிடையாது என்றால் சரியல்ல. நான் வேறு திப்பு ரெட்டியாரின் மகள் என்றால் இல்லை, அதனால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

<u>1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் மேற்படி குறுக்கு விசாரணை ஏற்றுக் கொண்டு பின்வருமாறு குறுக்கு விசாரணை</u>

கொடிவழி ஜாபிதாவை தாக்கல் செய்ய வழக்கறிஞருக்கு நான்தான் விவரம் சொன்னேன். திப்புரெட்டியரின் அப்பா, அம்மா பெயரோ குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். அதில் என் கையெழுத்து இல்லை என்றால் சரிதான். என் அம்மாவுக்கும் திப்பு ரெட்டியாருக்கும் எப்போது திருமணம் நடந்தது என்றால் எனக்கு தெரியாது. எங்குவைத்து திருமணம் நடந்தது அதில் யார் கலந்து கொண்டார்கள் என்பது தெரியுமா என்றால் என் பாட்டி எங்கள் ஊரில் வைத்து திருமணம் நடந்ததாக சொல்லியுள்ளார். நான் எப்போது பிறந்தேன் என்பதை வழக்கில் சொல்லவில்லை என்றால் சரிதான். என் அம்மா இறக்கும் போது அவருக்கு 40 வயதிற்குள் இருக்கும். திப்புரெட்டியார் இறக்கும் போது அவருக்கு வயது 60.70 வயதிற்கு மேல் இருக்கும், சரியாக தெரியவில்லை. நான் குடியிருக்கும் ஊரும் 1 முதல் 4 பிரதிவாதிகளின் ஊரும் வேறு என்றால் சரிதான். நான் பிறந்த பின்பு எங்கு வாழ்ந்து வந்தேன் என பிராதில் சொல்லவில்லை என்றால் சரிதான். தாவா வழக்கு தாக்கல் செய்யும் வரை 1 முதல் 4 பிரதிவாதிகளுடன் ஒன்றாக இருந்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து எந்த ஊரில் உள்ளது, அதன் விஸ்தீரணம் பற்றிய முழுவிவரம் தெரியுமா என்றால் தெரியும். இதுநாள் வரை 1 முதல் 4 பிரதிவாதிகளின் ஊருக்கோ, சொத்துக்கோ போனதில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணத்தில் 09.05.2017 ல் ஆவணம் பெற்றுள்ளதாக குறிப்பு உள்ளது என்றால் சரிதான். இந்த ஆவணத்தின் படி திப்பு ரெட்டிக்கு டி- செடியூல் ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். திப்பு ரெட்டிக்கு ஒதுக்கப்பட்ட சொத்து அவரது தனிப்பட்ட சொத்து ஆகும்.( சாட்சி தற்போது பூர்வீக சொத்து என சொல்கிறார்) அந்த சொத்தை வில்லங்கம் செய்வதற்கு அனுபவிப்பதற்கு அவருக்கு சட்டப்படியான உரிமை உள்ளது என்றால் சரிதான்.

என் தாத்தா பெயர் வேலாச்சி ரெட்டியார்ஆகும். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.,3 ஆவணத்தில் போலாச்சி ரெட்டியார் மகன் திப்பு ரெட்டியார் எனதான் போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் தாத்தாவின் பெயர் மேற்படி ஆவணத்தில் இல்லாத நிலையில் எதற்காக இந்த ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன் என தாவாவில் சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி ஆவணம் 03.02.2011 நான் அப்பா என்று சொல்லக்கூடிய திப்பு ரெட்டியாருக்கு எழுதிக் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் அப்பா என சொல்லக்கூடிய திப்பு ரெட்டியார் 28.05.2004 ல் இறந்து விட்டதாக வா.சா.ஆ.6 இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். 2004 ல் இறந்த திப்புரெட்டியாருக்கு 2011 ல் காமாட்சியம்மாள் எழுதிக் கொடுத்ததாக சொல்லும் ஆவணம் முன்னுக்கு பின் முரணாக உள்ளது என்றால் சரியல்ல. வழக்குரையில் திப்புரெட்டியாருக்கு வழக்கு சொத்துக்கள் தவிர வேறு சொத்துக்கள் இருப்பதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான், அது என்னென்ன சொத்து எங்கு இருக்கிறது என்று தெரியாது என்றால் வேறு சொத்துக்கள் இல்லை. நான் சொல்லியிருக்கும் பட்டா எண்.1960, 2822, 1527, 2105 இந்த பட்டாக்கள் 1 முதல் 4 பிரதிவாதிகள் பெயரில் உள்ளது என்றால் சரிதான். பிராதில் 11 பத்தியில் பாகத்தை பிரித்துக் கொடுக்க கேட்டதாக சொல்லியுள்ளேன், யாரிடம், எந்த தேதியில் கேட்டேன் என குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரிதான். 6 முதல் 8 அயிட்ட சொத்துக்கும் 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கும் சம்மந்தம் இல்லை என்ற எதிருரை தாக்கல் செய்துள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியும். வா.சா.ஆ.2,3,4 ஆவணங்கள் எனக்கு எப்போது தெரிய வந்தது என பிராதில் சொல்லவில்லை என்றால் வில்லங்கம் போட்டபின்புதான் தெரிய வந்தது. வா.சா.ஆ.9. வில்லங்க சான்றிதழில் வில்லங்க தேதி 26.07.2017 ந் தேதி தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அவ்வாறு தாக்கல் செய்யும் போது பாகபத்திரம் ,கிரையப்பத்திரம் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2017 ல் வில்லங்க விவரங்கள் தெரிந்திருந்தும் 2025 ல் தான் தாவா வழக்கை தாக்கல் செய்துள்ளது சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. நான் மேற்படி ஆவணங்களை ரத்து செய்ய கோரியுள்ள பரிகாரம் காலவரை தோசத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.11 முதல் 16 வரையிலான ஆவணங்கள் தாவா வழக்கிற்கு பின்னிட்டு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. திப்பு ரெட்டி என்ற பெயர் ஒற்றுமையை பயன்படுத்தி நான் பாகம் கோருவது நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்தை பொதுவான முறையில் அனுபவித்து வருவதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கில் கோரியுள்ள எந்த பரிகாரமும் கிடைக்காது என்றால் சரியல்ல.

**மறு விசாரணை – இல்லை.**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

SWARNAM J RAJAGOPALAN

Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.08.07 20:26:28 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.